புத்தாட்சி பெற்றும் புதுவாழ்வு

இல்லை

உருப்படியான மாற்றம் ஏதும் ஏற்படக் காணோம்

—(0)—

ஊழல்கள் மலிந்தன; - சுரண்டல் வளர்ந்தது

—(0)—

ஆக்கவேலைகளுக்கு அடிகோலப்படவில்லை

ஆச்சாரியா நரேந்திரதேவ் கண்டனம்

"அண்மையில் விடுதலை பெற்ற ஆசிய நாடுகளில் மக்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி காணும் அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால் துர்அதிஷ்டவசமாக இந்த நாட்டில் மாத்திரம் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை"

"மக்களின் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவோ, அல்லது இருக்கின்ற இன் [illegible]வோ ஆட்சியாளர் எத்தகைய முயற்சியும் [illegible]. நிர்வாகத்தின் எந்தப் பகுதியை எடுத்துக் [illegible], ஊழல்கள் மலிந்து காணப்படுகின்றன [illegible]டல் முறை நாளுக்குநாள் வலுத்து வருகிறது ஜமின்தாரிமுறை ஒழிப்பு பற்றி பேச்சு, வெற்று ஆரவாரப்பேச்சாகவே இருந்து வருகிறது"

[illegible]ண்மையில் நடைபெற்ற [illegible]ல ஒரிஸ்ஸா சமதர்ம கட்சி [illegible]ன்றுவது மாநாட்டுக்குத் தலைமைவகித்த, சமதர்மக் கட்சித் தலைவர் தோழர் ஆச்சார்யா நரேந்திரதேவ் தனது தலைமை உரையில் வெளியிட்டக் கருத்துக்களே மேலே எடுத்துக் காட்டப்பட்டிருப்பவை.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மக்களுக்கிருந்த அல்லல்கள் அத்தனையும், இன்னும் உள்ளன என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளார் தோழர் நரேந்திரதேவ்.

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று ஆடினர், பாடினர் நம் மக்கள் விடுதலை விழாக் கொண்டாடிய விதத்திலே மற்ற யாருக்கும் நாங்கள் சளைத்தவர்களல்ல என்பதை உலகறியக் காட்டினர், புதிதாக ஆட்சிப் பீடமேறிய காங்கிரசார். ஆனால், விடுதலை விழாக் கொண்டாடியதிலே இருந்த வேகம், கிடைத்த விடுதலையைக் கொண்டு, நாட்டு மக்களின் வேதனையைப் போக்கும் திட்டங்கள் தீட்டுவதில் காட்டப்படவில்லை.

நாடு விடுதலை அடைந்து ஆண்டுகள் மூன்றுக்கு மேலாகின்றன. இந்தியாவை இன்பபுரியாக்குவோம் என்று, அன்று மார்தட்டிப் பேசிய அன்பர்களின் இந்த மூன்றாண்டு ஆட்சியில் நாடு மூன்றடிகூட முன்னேறியதாகத் தெரியவில்லை. மக்கள் வாழ்விலே புதுமுறுக்கைக்காணோம். மறுமலர்ச்சிக்கு வழிகாண முடியவில்லை. ஏழைகளின் கூக்குரல் மேலும் மேலும் எழுந்த வண்ணமிருக்கின்றதேயன்றி, அமைதி காண முடியவில்லை. எப்பக்கமும் ஏழையர்கண்ணீர்

விடும் காட்சியே அதிகமாக இருக்கிறது. பாட்டாளி உலகம் பாடுபட்டும், பலன் காண முடியவில்லையே என்று பரதவிக்கிறது.

புத்தாட்சிபெற்ற வேளையில் சில இடையூறுகள் இன்னல்கள் ஆட்சியாளருக்கு இருக்கக்கூடும் என்று சிலர் இந்நிலைக்குக் காரணம் காட்ட முன்வரலாம். ஆனால் நம்நாட்டைப் பொறுத்தவரையில் அத்தகைய காரணங்களை கருத்துடைய காரணங்கள் என ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியே அக்காரணம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும், அது ஓராண்டு அல்லது ஈராண்டுகள் வரை செல்லுபடியாகலாம். அதற்கு மேலும் அவல நிலை நீடிக்கிறது என்றால், அதற்குக் காரணம் அரசியல் சூழ்நிலை என்று சொல்லுவது பொருந்தாக கூற்றேயாகும்.

பின்னர், எதுதான் இத்தகைய இன்னல்களுக்கு ஏற்றக் காரணங்கள் எனின்; சுருக்கமாகச் சொல்லிவிடலாம், ஆட்சியாளரின் அறியாமையும், ஆணவமும் கலந்த போக்கே இதற்குக் காரணம் என்று

இதைத்தான் 'துர் அதிர்ஷ்டவசம்' என்றும் குறிப்பிடுகிறார் சமதர்மக் கட்சித் தலைவர் தோழர் நரேந்திரதேவ்!

"துர் அதிர்ஷ்டவசமாக உருப்படியான மாறுதல் எதையும் காணமுடியவில்லை"

இது ஆச்சாரியா நரேந்திரதேவின் கவலை! கண்டிக்க வேண்டியவர் கவலைப்படுகிறார் பாவம், 'அதிர்ஷ்டம்' து

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502
விலை அரை அணா
Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.   MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)
மலர் 1] சென்னை (6—6—50) ✿ வெளியூர் (7—6—50) [இதழ் 271

அவசர உதவி அளிக்க ட்ரூமனுக்கு அதிகாரம்

யு. எஸ். ராணுவ உதவித் திட்டம் 5 ஆண்டுகள் நீடிக்கக்கூடும்

வாஷிங்டன், ஜூன் 5—

யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸ் முன், அடுத்த ஆண்டிற்கான ஆயுத உதவித் திட்டம் அங்கீகாரத்திற்காக வரவிருக்கிறது. தென் கிழக்கு ஆசியா, யூகோ இவைகளிடமிருந்து அவசர உதவி கோரிக்கை வந்தால், அதற்கு உடனே அனுமதியளிக்க மொத்த ஒதுக்கப்பட்ட தொகையில், 10 சதவிகிதம் வரை அனுமதிக்க பிரசிடெண்டுக்கு அதிகாரமளிப்பது பற்றி யோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த ராணுவ உதவித் திட்டம் எவ்வளவு, காலம் நீடிக்கும் என்பது தெரியாவிட்டாலும், சுமார் 5 ஆண்டு காலம் நீடிக்கலாம் என்று தெரிய வருகிறது. —தளோ

பாக். கோதுமை விலை குறைவு

காரச்சி, ஜூன் 4—

இங்கு கோதுமை விலை அதிகம் குறைந்திருப்பதால், ராபிசீசன் தீர்வைவரும், 25 சதவிகிதம் குறைவாக இருக்கும் என கவலை நிலவுகிறது.

களவுபோன ஸ்டாம்புகள்

கண்டுபிடிக்க முயற்சி

பாரிஸ், ஜூன் 5—

5 ஆண்டுகளுக்கு முன் ஹைவைகம்ப் என்ற இடத்தில், 29945 பவுன் பெருமான ஸ்டாம்புகள் களவுபோனது விஷயமாக தப்புதலுக்கு மேலும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. இருவர் களவுபோன ஸ்டாம்புகளில் 2000 பவுன் மதிப்புள்ளதை வைத்திருந்து கண்டுபிடிக்கப்பட்டு, பிரிட்டனில் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள். ஸ்டாம்புகளைப் பற்றிய இதரர்கள் பிரான்சில் இருப்பதாக ஸ்காட்லாண்ட்யார்டுக்குத் தெரியவந்திருக்கிறது.

மிரட்டல் போரை வெல்வதெப்படி?

அமெரிக்க ராணுவ அதிகாரிகளின் சண்டப் பிரசண்டம்!

நியூயார்க், ஜூன் 5—

மிரட்டல்போரை வெல்ல அமெரிக்கர்கள் தயாராக இருக்கவேண்டும் என்றும், இதற்கு மன உறுதி, முன்யோசனை எதையும் செய்ய முந்திக் கொள்வது போன்ற குணங்கள் அவசியம் வேண்டும் என்று யு. எஸ். வின் மேஜர் ஜெனரல்டொனுவன் நியூயார்க் ஹெரால்ட் டிரிபியூன பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

அவர் கூறும் யோசனைகளாவன :—

1 எக்காரியத்தையும் நாம் முந்திக்கொண்டு செய்யவேண்டும்.

2, எந்த ஆபத்தையும் சமாளிக்கத்தக்க மன உறுதிவேண்டும்.

3. வெளி நாடுகளிலுள்ள கம்பிரஜைகளைப் பாதுகாக்க, நடவடிக்கை எடுப்பதில் ஜரூராக இருக்கவேண்டும்.

4 கொள்கையை அறிவித்துவிட்டு, அதை அமுல் நடத்துவதில் காலதாமதம் காட்டக்கூடாது.

5 ஒரு ஸிவிலியன் தலைமையில், அரசியல் ராணுவ யூனிட் ஒன்று ஏற்படுத்தவேண்டும் இதன் கட்டுப்பாட்டில் ஆயுதங்கள் வைக்கப்படவேண்டும்.

அவர் மேலும் கூறுவதாவது: மிரட்டல் போரிலும் சரி வென்றுவிடக்கூடிய, சக்தி அமெரிக்காவுக்கு இருக்கிறதென்பதை ரஷ்யர்கள் உணர வேண்டும். இந்த நிலைமை ஏற்பட்டால் அதை சாதகமாகக் கொண்டு ஐ. நா. ஸ்தாபனம் மூலம் உலக அமைதியை, ஏற்படுத்த நாம் வழி தேடலாம்.

ஆலயத்தைத் திறந்துவிடு

—(0)—

இன்றேல் அறப்போர் தொடுப்போம்

எர்ணாகுளம், ஜூன் 3—

காலடியில் உள்ள கோவிலில், தாழ்த்தப்பட்டோரை அனுமதிக்கும்படி செய்ய சத்தியாக்ரகம் ஆரம்பிக்கப்படலாம் திருவாங்கூர்-கொச்சிக்கிடையே, திருவாங்கூர் பிரதேசத்தில் காலடி என்ற இடமிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர்கோயில் நுழைவு செய்யமுதன்முதலாக ஏற்பாடு செய்தது திருவாங்கூரேயானாலும், சமஸ்தானபிடனம் சமஸ்தான ஆதிக்கத்திற்குள்பட்ட கோவில்கள், விஷயத்திலேதான் அமுலுக்கு வரும். காலடிகோவில் சிருங்கேரி மடத்தின் ஆதிக்கத்தில் இருந்துவருகிறது.

இந்தக் கோவிலுக்கு தாழ்த்தப்பட்டோர் செல்வதை சாத்யமாகும்படி, சட்டத்தை சர்க்கார் திருத்தாமற்போனால் தாங்கள் சத்யாக்ரகம் செய்வோம் என்று, கோவில் அதிகாரிகளுக்குக் காலடியிலுள்ள சிலர் நோட்டீஸ் கொடுத்திருக்கின்றனர்.

"பௌத்த மதத்தை இழிவுபடுத்தவில்லை"

இஸ்வெஸ்டியா மறுப்பு

பௌத்த மதத்தினரைப் புண்படுத்தும் விதமாக எதுவும் எழுதவில்லை யென்று, 'சோவியத் சர்க்கார் பத்திரிக்கை இஸ்வெஸ்டியா' அறிவித்துள்ளதாக மாஸ்கோ ரேடியோ இன்று ஒலிபரப்பியது பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி புத்தர்பல தரிசனத்தை இழிவுபடுத்தி பௌத்த மதத்தினரின் மனதைப் புண்படுத்தும் வகையில் "இஸ்வெஸ்டியா" கார்ட்டூன் படம் போட்டிருந்ததென்று, இலங்கை சர்க்கார் சமீபத்தில் குற்றம் சாட்டியது.

குற்றச்சாட்டை மறுத்து இஸ்வெஸ்டியா எழுதியதாவது:— "சோவியத் மக்கள் மற்ற நாட்டு மக்களின் பண்பாட்டையும், மதப்பற்றையும் எவ்வளவு அதிகமாக மதிக்கிறார்கள் என்பது உலக முழுவதும் அறிந்ததொன்றாகும்."

மாலை மணி

சென்னை 6-6-50 செவ்வாய்க்கிழமை

குன்னன் ராஜா :: தீட்டிய கடிதம்

"திராவிட மொழிகளைக் கற்கவும், திராவிடப்பண்பாட்டை அறிந்துகொள்ளவும் ஈரான் (பெர்ஷியா) மக்களும்; மாணவர்களும் பெரிதும் விரும்புகிறார்கள். ஏற்கனவே சில மாணவர் வந்து என்னைத் திராவிட மொழிகளைக் கற்க உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டதால், அவர்களுக்கு என் அறையில் தனி வகுப்புகள் நடத்திவருகிறேன்" என்று "இந்து" பத்திரிகை திங்கள் இதழில் தோழர் குன்னன் ராஜா, ஆசிரியர் முடங்கலில் எழுதியுள்ளார்.

சமஸ்கிருத மொழியைப் பரப்பவும், சமஸ்கிருத கலாசாரத்தை ஈரான் மக்களுக்கு எடுத்துரைக்கவும் சென்னைப் பல்கலைக்கழக சமஸ்கிருதப் பேராசிரியர் தோழர் குன்னன் ராஜா ஈரான் சென்றுள்ளார்.

அவர் கற்றுக்கொடுக்கச் சென்றது சமஸ்கிருதம்; ஆனால் மக்கள் கற்கவேண்டுமென்று கேட்டது திராவிடமொழிகளை!

திராவிடராகிய (மலையாளி) தோழர் குன்னன்ராஜா தன் தாய்மொழியையோ அல்லது அதைச்சார்ந்த திராவிடமொழிகளில் ஒன்றையோ கற்று, அவைகளைப் பரப்ப முயலாமல் சமஸ்கிருதம் கற்றார் கற்று சமஸ்கிருதத்தைத் தேவமொழியென்றும், அதைப் படிக்கத் தங்களால்தான் முடியுமென்றும் கூறும் இனத்தாரைவிட அதிகத் திறமைகாட்டி அதன் விளைவாக சமஸ்கிருதப் பேராசிரியர் பதவியும் பெற்றார்.

திராவிட மக்களுக்கு-குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு இவரைத் தெரிந்திருக்க முடியாது. அவர் பழகும் வட்டாரங்கள் பேசும் மேடைகள், திராவிட மக்களுக்குத் தொடர்பு அற்றவைகளாக உள்ளனவாகையால், சமஸ்கிருதம் தேவ மொழி என்று பேசுவதில் இவருக்கு ஈடானவர்கள் ஆரியக்கோட்டத்தில் கூடக் காண்பது அரிது. செத்த மொழியே நாட்டுக்கு மொழி, 'பாரதத்தின்' பொது மொழியாகவே ஆக்கிவிடலாமென்று கூறுவதில் மந்திரி மாதவமேனன்கூட இவருக்கு ஈடாகமாட்டார். அப்படிப்பட்ட தோழர் அயல்நாட்டில் கண்ட காட்சி, அவரைப் பிரமிக்க வைத்துள்ளது.

"உங்களுடைய தாய்மொழியாகிய 'கவின் மலையாளத்தை'யே நான் கற்க விரும்புகிறேன். கற்றேனானால், சீரிய கருத்துகள் அடங்கிய 'செவ்வாழை' என்னும் எளிய பாட்டைப் படித்து இன்புறுவேன்; வள்ளத்தோலின் கவிதைகள் உள்ளத்தைக் கொள்ளைகொள்பவையென்று நான் பலர் சொல்லக் கேட்டதுண்டு."

"கேரளத்தை அடுத்துள்ள தமிழகத்தின் இலக்கியங்கள் மணற்கேணிகள் என்று கூறக் கேட்டுள்ளேன்; சங்க இலக்கியங்களின் மங்காத உண்மைகள், சுதந்திர உணர்ச்சியூட்டிய பாரதியின் பாடல்கள்; சுயமரியாதை உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூல்கள்; பர்தூசியின் நூல்களையும் ஒருபடி தாண்டிவிடக்கூடியவைகளாக உள்ளன என்று அறிந்துள்ளேன்.

"மற்றும் கன்னடத்தைப் பற்றியும்; களிதெலுங்கைப் பற்றியும் அவ்வாறே கழறுவார்கள்."

"சமஸ்கிருதத்தைக் கற்காவிடினும் அதைப்பற்றி நான் கற்றுள்ளேன்; அம்மொழியின் பெரும்பகுதி மதச்சார்புள்ளதாகவே எழுதப்பட்டுள்ளதேன்? காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்கள், மக்களின் மடமையை வளர்க்கும் புராணங்கள், வேற்றுமையை விரிவாக்கும் சாக்குருவி வேதாந்தங்களுமே அதில் மலிந்திருக்கின்றனவே! உலுத்துப்போன போன சமுதாயப் பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளவா அயல்நாட்டு மொழியைக் கற்பேன்; வேண்டவே வேண்டாம், ஏதாவது ஒரு திராவிடமொழியைக் கற்றுக் கொடுங்கள்" என்று, பாரசீக மாணவன் கேட்டிருப்பான். அவன் கூறிய உண்மைகள், நேரிட்ட வினாக்கள் விடைகள்தோழர் குன்னன்ராஜாவை வெட்கித் தலைகுனியும்படி செய்திருக்கவேண்டும்.

வேதனையடைந்த தோழர், திராவிடமொழிகளைக் கற்காமல் இருந்துவிட்டோமேஎன்று மனம்புழுங்கி இருக்கவேண்டும். தன்மான உணர்ச்சி;திராவிட ரத்தத்தின் எழுச்சி அவருக்கு அப்பொழுதுதான் ஏற்பட்டது; அதன் விளைவு தனக்குத் தெரிந்த அரைகுறை திராவிட மொழிகளைப் பாரசீக மக்களுக்குக் கற்றுக்கொடுக்க அவர் உடனே சம்மதித்தது தான். சொந்த நாட்டில் ஆரிய மொழிக்கு அடிமைப்பட்டுக்கிடந்த தோழர் குன்னன் ராஜா, அன்னிய நாட்டிலாவது தன்மான உணர்ச்சி பெற்றது மிகவும் பாராட்டக் கூடியதாகும்.

'இந்து' பத்திரிகையில் தோழர் குன்னன் ராஜா தீட்டிய முடங்கல், திராவிட மக்களுக்கு விட்ட ஒரு அறிக்கையாகும்; எழுதியவர் ஒரு திராவிடராக இருப்பதால, எழுதப்பட்டது திராவிடத்தைப் பற்றியதால் அவ்வறிக்கை ஒரு முடங்கல் பெறக்கூடிய அளவு விளம்பரம்தான் பெற்றுள்ளது.

திராவிட மொழிகளைக் கற்க ஆவலோடு தன்னை வந்தடையும் மாணவருக்குப் பாடம் கற்பிக்கப் போதிய புத்தகங்கள் இல்லையென்றும்; திராவிட மக்கள் நான்கு மொழிகளிலுமுள்ள எளிய நூற்களைத் தனக்கு அனுப்பினால் பேருதவியாக இருக்குமென்றும், தோழர் குன்னன் ராஜா கூறுகிறார். திராவிட மொழிகளைப் பரப்ப, பண்பாடுகளை எடுத்துக்கூற இன்றைய சூழ்நிலையில் நாம் பிரதிநிதிகள் அனுப்ப முடியாத நிலையில் இருப்பதால், தோழர் குன்னன் ராஜாவின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுவது திராவிட மக்களுக்கு மிக அவசியமானதாகும்.

உருவாகப் போகின்ற திராவிடத்தின் பண்பாட்டைப்பாரசீகம் நன்கு உணர அவர்கள் திராவிட மொழிகளைக் கற்க வேண்டுவது அவசியமாகையால் திராவிடர்கள்குறிப்பாகத் தமிழர்கள் தம்மால் இயன்ற அளவுக்குத் தமிழ்ப் புத்தகங்களைத் தோழர் குன்னராஜா, தி யூனிவர்சிடி கிளப் ஷாரிஜ் டெஹ்ரான் (ஈரான்) என்ற முகவரிக்கு அனுப்புவது வரவேற்கத்தக்கதாகும்.

ஆரியமொழியைப் பரப்ப அயல்நாடு சென்று, அங்கே திராவிட மொழிகளையும், திராவிடப் பண்பாட்டையும் எடுத்தோதிவிட்டு நாடு திரும்பினால் தேசீய ஏடுகள் அவருக்கு எத்தகைய வரவேற்பளிக்குமென்பதை நீங்களே உங்கள் மனக்கண்முன் நிறுத்திப் பாருங்கள்!

முத்தமிழ் வளர்ச்சிக் கழகம்

வடுகப்பாளையம், மே 31—

29-5-50-ல் இக்கழகத்தின் மாதாந்திரச் செயற்குழுவினர்கள் கூட்டம், தோழர் வி. கே. பழனிச்சாமிக் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டது.

சொற்பொழிவு மன்றத்திற்குத் தலைவர், செயலாளராக தோழர்கள் ம. வெ. கோனார், வி. எஸ். குமாரகோபால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்திய சர்க்கார் தொகுக்கும் சுதந்திர வரலாற்று ஏட்டில், வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் ஆகியோர்வரலாறுகளைச்சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறது.

சென்னை சர்க்காரின் தற்போதைய பாடத் திட்டம், தமிழ் மொழிக்குத் தாழ்வளிப்பதாக-அவசியமற்று இருப்பதால், அதை விரைவில் மாற்றி தமிழ் மொழிக்கு முன்போல் முதலிடம்-அளிக்கவும்கட்டாய பாடமாக்கவும் சென்னை சர்க்காரை இக்கழகம் கேட்டுக் கொள்ளுகிறது.

மற்றும் பல தீர்மானங்களுடன் கூட்டம் முடிவுற்றது.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

கட்டிட நிதிக்கு

தேவை ரூ. 10,000

கிடைத்திருப்பது 3,000

★

இடைவெளியை காணிக்கையால் இணையுங்கள்

யூகோவுக்கு எதிராக சதி

முன்னாள் தளபதி மீது வழக்கு

பெல்கிரேட், ஜூன் 5—

யூகோ ராணுவத்தில் பிரசார டைரக்டராக இருந்த வால்டா டாட்செவிக் என்ற கர்னல், டிட்டோவுக்கெதிராக துரோக எண்ணத்துடன் நடந்துகொண்டதாக குற்றம்சாட்டப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகிறார். நேற்று விசாரணை முடிந்ததும் கோர்ட்டிலிருந்தவர்கள் எதிரிக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என கோஷமிட்டனர்.

வால்டருடன் பிராங்பெட்ரிஷிவிக் என்ற மற்றொரு ஜெனரல்மீதும், இதே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இவர்கள் இருவர் வழக்கிலும் செவ்வாயன்று விசாரணை கூறப்படுமாம்.

உண்மையைக் கூறாதே!

பறக்கும் தட்டுபற்றிய நூலுக்குத் தடை

சிட்னி, ஜூன் 5

"பறக்கும் தட்டுகள் உண்மைதான்" என்கிற புத்தகத்தில், தேசிய பாதுகாப்பு பற்றிய சில ரகசியங்கள் அடங்கியிருப்பதால், இப்புத்தகத்தை வெளியிடக்கூடாதென்றும், ஏற்கனவே வெளியிட்டுள்ள புத்தகங்களை உடனேவாபஸ் பெறவேண்டும் என்று யுனைடெட் ஸ்டேட்ஸ் சர்க்கார் ஒரு உத்திரவை பிறப்பித்திருக்கின்றனர்.

அணுகுண்டை கண்டு அஞ்சாதீர்

லண்டன், ஜூன் 5—

அணுகுண்டென்றதுமே பீதியில் தொடை நடுங்கவேண்டிய அவசியமே இல்லை என்றும், ஒரு அணுகுண்டை பிரயோகித்தால் இந்தப் பூமியிலுள்ள சகல ஜீவராசிகளும் அழிந்துவிடும் என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகுமென்றும், பிரிட்டிஷ் அணு ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் டைரெக்டர் ஸர் ஜான்காக்ரோப்ட் கூறுகிறார். —ரூட்டர்

ஹோசிமின் கைவிடப்படலாம்

பிரஞ்சு படையினர் காணும் கனவு

லண்டன், ஜூன் 5—

வியட்னாம் தலைவர் ஹோசிமின் னினால் தங்களுக்கு லாபமில்லை என்று தெரிந்தால் மார்ஷல் ஸ்டாலின் ஹோசிமினை கைவிட்டதுபோல் ரஷ்யர்களும், சீனக் கம்யூனிஸ்டுகளும் ஹோசிமினை கைவிட்டுவிடுவர் என்று பிரெஞ்சு ராணுவ கமாண்ட் நம்புகிறது.

புத்தாட்சிபெற்றும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'அதிர்ஷ்டம்' என்ற கற்பனை மொழிகளில் நம்பிக்கை வைத்திருக்கும் காரணத்தால்!

காங்கிரஸ் ஆட்சியில், மறுமலர்ச்சி காண முடியாமைக்கு துர்அதிர்ஷ்டம், காரணமாகத் தென்படுகிற அளவுக்கு, வேறு உண்மைக் காரணம் எதுவும் அவருக்குப் புலப்படவில்லை போலும்! இங்ஙனம்,காரணம் அறியாது கவலைப்படும் தோழருக்கு நாம்கூறவிரும்புகிறோம், "தோழரே, இப்[illegible]ட்டுப் பயனில்[illegible]க்கு வழி[illegible]மைக்குக் காரணம், [illegible]அதிர்ஷ்டமல்ல.' மந்திரிகளின், மந்தப் புத்தியும், அதற்குக் காரணமாக இருக்கும் அவர்களது உல்லாச வாழ்வுமேயாகும். நமது மந்திரிகளுக்கு ஆழ்ந்து சிந்தித்து ஆக்க வேலைகளுக்குத் திட்டம் தீட்டப்போதிய அவகாசம் இல்லை. நான் தவறாமல் நாட்டிலே பவனி வருவதற்கும், [illegible]சியைக் காப்பாற்ற, காந்தியார் திட்டங்களுக்குப் பரிந்து பேச பழைமைக்குப்பாதுகாப்புத் தேட, பகுத்தறிவுப் பிரசாரங்களுக்கெதிராகப் படைதிரட்ட: அறிவுப் பிரசாரங்களுக்கு அணைபோட, கவைக்குதவாக் கதர்திட்டத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேச; இன்னோரன்ன பணிகளுக்கே நமது அமைச்சர்களுக்கு நேரம் போதவில்லை! இந்நிலையிலே, அவர்களுக்கு நாட்டின் உண்மைநிலை எங்ஙனம் புரியும்?

எனவேதான், நாடு விடுதலை பெற்றும் மக்களின் வேதனை தீர்ந்தபாடில்லை-தீரவழியில்லை தீர்க்கும் வழியையும் அறிய முடியவில்லை அமைச்சர்களால். இங்ஙனம், ஆளவந்தாரிடம் காணப்படும் குறைபாடுகளே மறுமலர்ச்சிக்குக் குறுக்கே நிற்கின்றன. இந்நிலை மாற வேண்டும். மாறவேண்டுமானால், ஆச்சார்ய நரேந்திரதேவ் கள் இம்மாதிரி அபலக்குரல் கிளப்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. குறைபாடுகளைக் களைந்தெறிய, நாட்டிலுள்ள முற்போக்குச் சக்திகளின் கூட்டு முன்னணி அமைக்க முயலவேண்டும் அஃதொன்றே அவர் காண விரும்பும் சமதர்மத்தை நிலைநாட்ட வல்லது.

வெறியரின் வீண் பிரசாரம்!

ரஷியாவையும், ஸ்டாலினையும்பற்றி ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பதே அமெரிக்கப் பத்திரிகைகளின் வேலையாகிவிட்டது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டு "டெட்ராயிட் நியூஸ்" என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள இந்தக் கார்ட்டூன் படமாகும். சீனு கம்யூனிஸ்டு நாடானதால், அந்நாட்டுக் கலாச்சாரம் சீர்கெட்டுவிடும், என்றும் பொருள்படும்படி, சீனக் கோபுரங்கள் ஸ்டாலினுல் ஓட்டப்படும் டாங்கியால் தகர்க்கப்படும் வகையில் இப்படம் தீட்டப்பட்டுள்ளது.

பௌத்த சின்னங்கள்

ரங்கூனுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன

கல்கத்தா, ஜூன் 4—

பர்மா பிரதமர் தோழர் தாகின் நு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பௌத்த சின்னங்கள் இன்று ஒரு பிரத்யேக விமானத்தின் மூலம் கல்கத்தாவிலிருந்து ரங்கூனுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

மூன்று முக்கிய பௌத்த பிட்சுக்களும், மூன்று பர்மா சர்க்கார் பிரதிநிதிகளும் இந்த புனித சின்னங்களை எடுத்துச் செல்ல வந்தார்கள். ரங்கூன் நகரிலுள்ள ஷேவடாகன் கோபுரத்தில் இந்தச் சின்னங்கள் வைக்கப்படும்.

இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர் எண்ணிக்கை

கொழும்பு, ஜூன் 3—

1949 முடிவில் இலங்கையில் இருந்த இந்தியத் தொழிலாளர் எண்ணிக்கை 764,183 என்று இலங்கை தொழில் கமிஷனர் தோழர் எம். ராஜலிங்கம் ஒரு அறிக்கையில் கூறுகிறார்.

இதில் ஆண்களின் எண்ணிக்கை 220476, பெண்கள் 217776 குழந்தைகள் 325971.

1948-ல் இந்த தொழிலாளர் எண்ணிக்கை, 742000.

அமெரிக்காவில் தேயிலை உபயோகம் அதிகரிப்பு

நியூயார்க், ஜூன் 5—

அமெரிக்கர்கள் தேயிலையை அதிகமாக உபயோகிக்கவாரம்பித்திருக்கிறார்கள்.

இதற்குள்ள காரணங்களில் ஒன்று காபியின் விலை அதிகரித்து வருவதுதான் என்று சொல்லப்படுகிறது.

அமெரிக்கர்கள் தேயிலை பானம் அதிகம் அருந்துகிறார்களே ஒழிய, அதை எப்படித் தயாரிக்கிறது என்பது அவர்களுக்கு இன்னும் தெரியவில்லை.

நாடெங்கும் தண்ணீர் பஞ்சம்

சென்னை, ஜூன் 3—

1950 மே 27-ந் தேதியோடு, முடிவடைந்த வாரத்தில் செங்கற்பட்டு, தென்ஆர்க்காடு, சித்தூர், வடஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை டிவிஷன், கோயம்புத்தூர், மதுரை, ராமநாதபுரம், தென்கன்னடம் ஆகியவற்றிலும், கடப்பை ஜில்லாவின் பல பாகங்களிலும் தண்ணீர் சப்ளை போதாமல் இருந்தது.

சிவகங்கை, திருப்பத்தூர், பரமக்குடி தாலுகா முதலிய பாகங்களில் பயிர்கள் கருகி வருவதாகக் கூறப்படுகிறது. தென்கன்னட ஜில்லாவின் பகுதிகளில் மூன்றுவது போகம் செய்த பயிர்கள் நீய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

திருச்சியில் மின்சார விளக்குகள் எரியும் நேரம்

நகரசபை கோரிக்கைக்கு சர்க்கார் இணக்கம்

திருச்சியில் இரவு 11 மணி வரை தெரு விளக்குகள் எரிந்து வந்தன. பின்னர் இருட்டாக இருந்து வந்ததின் பேரில், முனிசிபாலிடியார் சர்க்காரை கோரியபடி மூன்று கம்பங்களுக்கு ஒரு விளக்கும், ரோடுகள் சந்திக்குமிடங்களில் உள்ள விளக்குகளை இரவு முழுவதும் எரிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். பட தக்க நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். ஜூன் 3-ந் தேதி முதல் இது அமுலுக்கு வரும்.

இரண்டு பஞ்சு மில்லும் டால்மியா புரத்திலுள்ள சிமெண்டு முதலிய தொழிற்சாலைகளுக்குமின்சார விநியோகமும் நாளை முதல் கிடையாதாம்.

மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்

மாகாண லீக் கவுன்சில் அங்கத்தினரான தோழர் மகமதுயேஜும் அவருடைய சகோதரர் குமாரர்கள் இருவரும் வேட்டையாடச் சென்ற இடத்தில் யாரோ சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று இந்த செய்தி கிடைத்திருக்கிறது மேலும் விவரங்கள் கிடைக்கவில்லை.

மதுரை மாவட்ட

தி. மு. கழக முதல் மாநாடு

ஜூன் மாதங்கள் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் "செல்வம் பந்தலில்" நடைபெறும்

மாநாடு சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு

தோழர் டி. வி. நமசிவாயம் இன்னிசை அரங்குடன் துவங்கும்

★

தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்:- தோழர் கே. கே. நீலமேகம்

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலந்துகொள்கிருர்கள்

சனி இரவு "சிலை" நாடகம்

(மதுரை அழகரடி வேலாயுதம் நினைவுப் படிப்பகத்தார் நடிப்பது)

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் நடைபெறும்

ஞாயிறு இரவு "சந்திரமோகன்" நாடகம்

(சே. அர். ராமசாமி, பி. ஏ. நடிப்பது)

தோழர் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்

324, அழகரடி, மதுரை. வரவேற்புக் குழுவினர்.

குறிப்பு :—6—6—50 முதல் மாநாட்டு அலுவலகம் சோழவந்தானுக்கு மாற்றப்படும்

வாரத்திற்கு ஒருநாள் 'இலவச' ரயில் பிரயாணம்!

அதிகநேர வேலைச் சம்பளத்தைக் குறைக்க, ரயில்வே இலாகா கையாளவிருக்கும் புதிய விதிமுறைகளில், டிகட் எடுக்காமல் தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய்களாக இலங்கை ரயில்வேயை ஏமாற்றிப் பிரயாணம் செய்து கொண்டு வருகிறவர்களுக்கு, ஓர் தனி வாய்ப்பு ஞாயிற்றுக் கிழமைகளில் இனிமேல் கிடைக்குமென்று தெரிகிறது. இவர்கள் இனிமேல் டிக்கட் எடுக்காமலே ஞாயிற்றுக் கிழமைகளில் ரயில்பிரயாணம் செய்யலாம்! இவர்களைப் பரிசோதிக்க இன்ஸ்பெக்டர்களோ, அல்லது டிக்கட் வசூலிப்பவர்களோ அன்றுவேலையிலிருக்கமாட்டார்கள்.

அதிகநேர வேலைச்சம்பளம், ஞாயிற்றுக்கிழமை வேலை சம்பளம் ஆகிய செலவினங்களை மட்டுப்படுத்தும்படி அரசாங்கம் ரயில்வேக்கு அறிவித்ததை யொட்டி, ரயில்வே இலாகா கையாளவிருக்கும் புதிய முறை இதுதான்: அதாவது ஞாயிற்றுக் கிழமைகளில் வேலைபார்க்கும் டிக்கெட் பரிசோதகர்களையும், டிக்கெட் வசூலிப்பவர்களையும் இனிமேல் அன்றைபத் தின வேலைக்குப் போகாதபடி நிறுத்திவிடும்!

ரயில்வே இலாகாவின் இந்தப் புதிய ஏற்பாடு காரணமாக, இனிமேல் சனிக்கிழமை நடுராத்திரி தொடங்கி, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நடுராத்திரிவரையில், டிக்கெட் எடுக்காமல் பிராயாணம் செய்கிறவர்களுக்கு ஒரு சான்ஸ் அளிக்கப்பட்டிருக்கிறது.

'ஏர் ஸிலோன்' விமானப் போக்குவரத்துகள் விபரம்

"ஏர்சிலோன்" விமானக் கம்பெனி ஜூன் 12-ந் தேதியன்று புதியட கோடா விமானமொன்றின் போக்குவரத்தை ஆரம்பித்து வைக்கிறது. தினந்தோறும் மாலை 3 மணிக்கு சென்னைக்கு அவ்விமானம் புறப்பட்டுச் செல்லும். அது நேகசந்துறையில் சற்றுநேரம் தங்கிவிட்டு, பின் அது பிரயாணத்தைத் தொடரும். இவ்விமானம் சென்னையிலிருந்து காலை 8 மணிக்கு புறப்பட்டு நண்பகலுக்குச் சற்று முன்னதாகக் கொழும்பு வந்தடையும்.

கராச்சிக்குச் செல்லும் விமானங்கள், தற்போதுள்ளபடி வெள்ளிக்கிழமையிலும், சனிக்கிழமையிலும் போக்குவரத்து நடத்துவதற்குப் பதிலாக இனி திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் போக்குவரத்தை நடத்தும். அப்பிராயணத்தை நடத்தும் விமானங்கள், காலை 6-45 மணிக்குக் கொழும்பை விட்டுப் புறப்பட்டு, அதே நாள் மாலையில் கராச்சி போய்ச் சேரும். அது திருச்சியிலும், பம்பாயிலும் நிற்கும். கொழும்-திருச்சி போக்குவரத்து திங்கட்கிழமை தவிர, இதர நாட்களில் நடைபெறும்.

அறந்தாங்கி காரைக்குடி ரயில் மார்க்கம்

காரைக்குடி, அறந்தாங்கி இருப்புப் பாதை மார்க்கத்துக்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்காக சீக்கிரவில் வேலை ஆரம்பிக்கப்படும் என்றும், மத்திய சர்க்கார் ரயில்வே போக்குவரத்து மந்திரி தோழர் சந்தானம் இன்று திருச்சியில் ஒரு பேட்டியின்போது கூறினர்.

தஞ்சாவூரிலிருந்து ஒரு விசேஷ சலூனில் அவர் இன்று இங்கு வந்து சேர்ந்தார்.

தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை போன்ற இதர மார்க்கங்கள் பற்றிப் பிறகு ஆலோசிக்கப்படும் என்றும், ரயில்வே ஸ்டேஷன்களில் மின்சார விளக்குகள் போடும் திட்டம் எவ்வளவு செலவானாலும் நிறைவேற்றிவைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

நமது புதிய ஏஜெண்டுகள்

ஜே. ராஜலிங்கம்
கணேசர் ஸ்டோர்ஸ்
பெரிய தெரு
கும்பகோணம்

ஜீவன் நியூஸ் சர்வீஸ்
வாழப்பாடி

ஆர். எஸ். கதிர்வேலு
சர்க்கார் சாமக்குளம்

மீயாகான் நியூஸ்மார்ட்
பத்தர்வேலா (சிலோன்)

ஏ. அண்ணாமலை
மேட்டூர் அணை

இந்திய சர்க்காரின் தொழிற் பயிற்சித் திட்டம்

தொழில்களுக்கு வேண்டிய வேலையாட்களைப் பயிற்றுவிக்க, மத்திய சர்க்கார் வகுத்துள்ள புதிய திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் நடவடிக்கை 1950 ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. தொழில் நுட்ப-வேலைப் பயிற்சித் திட்டத்தின் கீழ், 56 பயிற்சி ஸ்தலங்களில் சேர்ந்துக் கொள்ள 5000 பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருஷமும் 10,000 பேர் விதம் இரண்டு வருஷத்துக்கு இப்பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள 5,000 ஸ்தானங்களுக்கும் ஆட்களைப் பொறுக்கியெடுக்கும் வேலை நடைபெற்றுவருகிறது. இவர்களைத் தவிர, இடம்பெயர்ந்தவர்கள் 2000 பேருக்கும் இப்பயிற்சி அளிக்கப்படும்.

வேலையிலமர்ந்தவர்களின் எண்ணிக்கை இந்த மாதத்தில் குறைந்து விட்டதாக, வேலை தேடி தரும் ஸ்தாபனங்களின் புள்ளிவிவரங்களிலிருந்து தெரியவருகிறது. 1950 மார்ச் மாதத்தில் 24,976 பேருக்கு வேலை கிடைத்திருக்கையில் ஏப்ரல் மாதத்தில் 23,887 பேருக்கே வேலை கிடைத்திருக்கிறது. கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களின் எண்ணிக்கை, அதிகரித்ததைய் அஸ்ஸாம், பிஹார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் வேலை தேடிக்கொள்ள உரிமை நாடிப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது. தொழில் முதலாளிகள் இடம் பெயர்ந்து வந்தவர்களை வேலையாட்களாகவோ, வேலைப் பயிற்சியாளராகவோ, வைத்துக் கொள்ள ஊக்கமளிக்கும் பொருட்டு அவர்களுக்குப் பண உதவிசெய்வதற்கும், இரும்பு எஃகு முதலிய கச்சாப்பொருள்களும் அதிகமாக சப்ளை செய்வதற்குமான திட்டமொன்றும் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது. வேலை கிடைப்பது கடினமாயிருந்தபோதும்கூட 5,233 முதலாளிகள் வேலை தேடித்தரும் காரியாலயங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொண்டனர்.

க்ஷயத்தை ஒழிக்க முயற்சி

அடுத்த 5 ஆண்டுகளில் பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் பி. ஸி. ஜி. ஊசி மருந்து "இன்ஜக்ஷன்" செய்வதென்று, சிங்கப்பூர்சர்க்கார் திட்டம்போட்டிருக்கிறது.

இதற்காக டேனிஷ் நிபுணர்கள் டென்மார்க்கிலிருந்து இங்கு வந்து, இதற்கான பயிற்சியை அளிக்கவிருக்கிறார்கள். இக்குழுவினர் 4 மாதம் இங்கு தங்கியிருப்பாராம்.

கள்ள நாணயம் அச்சிடும் கொள்ளையர் விடுதி!

3 பெண்கள் கைது

ஆக்ரா, ஜூன் 3—

பெரிய அளவில் அமைந்த கள்ள நாணயம் அச்சிடும் சாலை ஒன்றை, நேற்றிரவு லோகமண்டி, பிரதேசத்தில், ஆக்ரா போலீசார் கண்டுபிடித்தனர். போலீசார் அவ்வலுவலகத்தைச் சூழ்ந்துகொண்டு, கள்ள நாணயம் அச்சடிக்க உபயோகிக்கப்பட்ட பல கருவிகளைக் கைப்பற்றினர். போலீசாரைக் கண்டவுடன் உள்ளே இருந்தவர்கள் ஓட்டம் பிடித்தனர். 3 பெண்கள் கைதாகியுள்ளனர்.

கழக நடவடிக்கைகள்

*

அம்மாபேட்டை:— 21-5-50 ஞாயிறு இரவு 7-30மணிக்குக் கழக கட்டிடத்தில் தோழர் ஸ்டாலின் கே. ராமசாமி அவர்கள் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, "தென்மொழியும் வடமொழியும்" என்னும் பொருள்பற்றி தோழர்கள் டி. என். இராமலிங்கம், கே. எஸ். அப்துல் ரஹீம், எம். பி. வள்ளியப்பன் முதலியோர் தெளிவாகவும், விளக்கமாகவும் சொற்பெருக்காற்றினார்கள்.

• • •

காஞ்சீபுரம்:—தி. மு. கழகத்தின் கமிட்டிக் கூட்டம் 28-5-50 மாலை நடைபெற்றது. தற்போதுள்ள செயற்குழுவை மாற்றியமைப்பதுபற்றியும் ஆலோசிக்கப்பட்டது. பின்னர் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபின், கூட்டம் முடிவடைந்தது.

1. செயற்குழுவைத் தற்போதைக்கு மாற்றவேண்டியதில்லை. பொருளாளராகத் தோழர் சுப்பிரமணியமும், தோழர் எஸ். கே. முத்துசாமி விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2. செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க கமிட்டிக்கு, இக்கழகத்தின் சார்பில் தோழர்கள் எஸ். முருகேசன் சி. எஸ். சதாசிவன் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

3. மத்திய கழக அமைப்புக்குழு செயலாளரின் கோரிக்கைக்கிணங்க, சீக்கிரமே ஒருபொதுக்கூட்டத்தை நடத்தும்படி செயலாளரை இக்கூட்டம் வேண்டுகிறது.

* * *

சச்சமங்கலம்:— இக்கழகத்தின் சார்பில், சீர்திருத்தத் திருமணம் புரிந்துகொண்ட தோழர் இளங்கோவன் தோழியர் சுந்தரமணி ஆகியவர்களைப் பாராட்டுவான் வேண்டி 27-5-50 மாலை ஓர் பாராட்டுக் கூட்டம் தோழர் அம்மையப்பன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

தோழர்கள் இரா. செங்கபெருமாள், இரா. சுந்தரம் ஆகியவர்கள் வாழ்த்துரை வழங்கினர்கள் பின் கழகச் செயலாளர் மணமக்களின் முற்போக்குத் தன்மையைப் பாராட்டி, கழகத்தின் சார்பில் மலர்மாலை சூட்டினார்கள். மணமகன் பாராட்டிற்கு நன்றிகூறிய பிறகு மணமகள் சுந்தரமணி இக்கழகத்திற்கு ரூ. 2 அன்பளிப்பு அளித்தபின்பு கூட்டம் இனிது முடிவுற்றது.

'மணமகள்' ஆரம்பவிழா!

சென்னை, ஜூ 7—

31-5-50 காலை நியூடோன் ஸ்டுடியோவில், என்.எஸ்.கே பிலிம்சாரின் 'மணமகள்' ஆரம்பவிழா சிறப்புற நடைபெற்றது. படம் பிடிப்பைத்தொடங்கும்பொறுப்பை தோழர் வ. ரா. அவர்கள் நிறைவேற்றிவைத்தார். விழாவில் பத்திரிகை ஆசிரியர்கள், அறிஞர்கள், நடிகர்கள், கலைஞர்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொண்டனர் தோழர்கள் எஸ். எஸ். வாசன் பாகவதர், எ. எஸ். பி. அய்யர், டாக்டர் பண்டாரலே, ஸ்டாலின் சினிவாசன், டி. சதாசிவம் ஆகியோரும் கலந்துகொண்டனர். தோழியர் எம். எல். வசந்தகுமாரி வணக்கப்பாடல் இசைத்தபின், தோழர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் வேண்டுகோளின்படி தோழர் வெ. நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

கலைவாணர் அவர்கள் வ.ரா.வுக்கு வரவேற்புக்கூறி, எஸ். எஸ். வாசன் சினிமாக் கலைக்கு, நீண்ட்டுக்காலத் தொண்டு செய்திருக்கும் அரிய செயலை விளக்கிப் பேசி மாலை சூட்டினர். 11-30 மணிக்கு விழா ஆரம்பவிழா இனிது முடிவுற்றது.

தி. மு. க. கிளை

ஏர்வாடி - சிற்றூர்க்கிளை

ஏர்வாடி, மே 30—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் மாணவர் எம். முகம்மது மீரான் அவர்கள் தலைமையில், 23-5-50 அன்று மாலை 5-30 மணிக்கு நம்பியாற்று மணல் திடலில் நடைபெற்றது. பொதுப்புணர்ச்சியும், ஆர்வமும், சொலாற்றும் திறனும் பெற்ற பல மாணவர்கள் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது. தலைவர் தனது முன்னுரையில் கழகத்தின் கொள்கைகளையும், அதன் அவசியத்தைப்பற்றிச் சிறிது நேரம் பேசினர். அதுபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஏர்வாடி சிற்றூர்க்கிளை திறக்கப்பட்டது.

பின்னர் செயற்குழு ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு:—

செயலாளர்:—அ. ஆசன், பொருளாளர்:—மு. முகம்மது மீரான், விளம்பர உறுப்பினர்:—ஆ. மீ. அலிசேக்மன்சூர். ஏனையசெயற்குழு உறுப்பினர்கள்:—எம். கே. முகைதீன், கனகராக, எஸ். இ. எம். கனி, மீரான் முகைதீன், எஸ். கனி, என். எ. மீரான் சாகிபு, என். எ. அசனர், மீ. முகம்மது அலி, எம். கே. கனி.

திராவிடநாடு ஜாமீன் நிதியை திருப்பக் கொடுக்காமல், மத்திய கழக காரியாலயக் கட்டிட நிதிக்கு அப்பணத்தை உபயோகிக்கும்படி அண்ணாத்துரையை இக்கழகம் கேட்டுக் கொள்கிறது. துண்டுப் பிரசுரங்கள் மூலம் இயக்கக் கொள்கைகளை விளக்கி, உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மாணவர்கள் ஈடுபடவேண்டுமென்றும், கேட்டுக் கொள்கிறது.

> **தி. மு. க.**
> ❀
> **இதுவரை தழைத்துள்ள கிளைகள்**
> **486**

ட்ருமன் பேசப்போகிருர்!

வாஷிங்டன், ஜூன் 5—

அடுத்தவாரம் ஜனாதிபதிட்ருமன் இரு முக்கிய பிரசங்கங்களை செய்வார் என்று தெரியவருகிறது. ஒன்று பொருளாதார கொள்கைப் பற்றியும், மற்றொன்று அயல்நாட்டுக் கொள்கை பற்றியும் இருக்கும் எனத்தெரிகிறது.

லண்டனில் தன் ராஜாங்கமந்திரி வெளியிட்ட கொள்கைகளுக்கு இவர் பலத்த ஆதரவை வெளியிடுவார் எனத்தெரிகிறது.

பரூக் மன்னரின் சகோதரியின் மணம்

கெய்ரோ, ஜூன் 5—

பரூக் மன்னரின் மற்றொரு சகோதரியானஃபைசாவுக்கும், முகம்மது அலிய பேக்கும் திருமணம் நடைபெற்றது. எகிப்திய அயல்நாட்டிலாகா காரியதரிசியாக மணமகன் வேலை பார்த்துவந்தார். திருமணம் ஆனதும் அவர் அப்பதவியை ராஜினாமா செய்து விட்டார்.

தில்லை-வில்லாளன் எழுதிய புதிய நாவல்!

அத்திப் பூக்கள்

விலை 12 அணா

பரந்தாமனுக்கு பகிரங்கக் கடிதம் 0-3-0

0-15-0 அணா ஸ்டாம்பு அனுப்பி இரண்டு புத்தகங்களையும் புக்போஸ்டில் பெறலாம். விற்பனையாளருக்கு 25% கழிவு உண்டு. அனுப்பும் செலவு இனாம்.

கிடைக்குமிடம்:—

எம். சூரி,

14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1.

நன்றி அறிவிப்பு

எமது "மணமகள்" படத்தை 31—5—50-ல் நியூடோன் ஸ்டுடியோவில் வ ரா. அவர்கள் ஆரம்ப விழா நிகழ்த்தியபோது, கலந்துகொண்ட ஆசிரியர்கள், நடிகர்கள், கலைஞர்கள், பெரியார்கள், அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, ஆசித்தந்திகள், கடிதங்கள் அனுப்பிவைத்த உள்ளூர், வெளியூர் அன்பர்களுக்கும் எமது நன்றியை இதனுல் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்பான

என். எஸ். கிருஷ்ணன்-டி. ஏ. மதுரம்

குழந்தைஉதைத்து தாய் மரணம்!

பம்பாய், ஜூன் 4—

ஒரு வயது குழந்தையை சீராட்டிக்கொண்டிருந்த 30 வயதுள்ள தாய் ஒருத்தி, அது உதைத்ததன் விளைவாக உயிர் துறந்தாள்.

சமீபத்தில் ஆபரேஷன் செய்யப்பட்டிருந்த அவள் வயிற்றில், அகஸ்மாத்தாக குழந்தை உதைத்ததால், அவளுக்கு உடனே தாளமுடியாத வலி ஏற்பட்டதாம். அவளை ஆஸ்பத்திரிக்கு உடனே சுற்றத்தார் கொண்டுபோயினர். எவ்வளவோ சிகிச்சை செய்தும் அவள் மறுநாள் காலையில் உயிர் துறந்தாள்.

டாக்டர் தற்கொலை

பம்பாய், ஜூன் 4—

பம்பாய் டாக்டர் ஒருவர் இன்று காலை தற்கொலை செய்துகொண்டார். பம்பாய் சர்வகலாசாலையின் எம். எஸ். பரீட்சையில் தாம் தோல்வியுற்றதே அவருடைய தற்கொலைக்குக் காரணம் என்று தெரிகிறது.

மாவீர் ஜெயின் வித்யாலயத்து ரெசிடென்ட் மெடிகல் ஆபீசரான டாக்டர் கே. ஜி. மேத்தா (வயது 30 இன்று பொட்டாசியம் சைனேடு உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் எழுதி வைத்துள்ள கடிதம் ஒன்றில் பரீட்சையில் தோல்வியுற்றதாலேயே, தாம் இந்த முடிவுக்கு வந்ததாக கூறியிருக்கிறார். அவரது படுக்கையின் அருகாமையில், ஒரு காகிதத்தில் அந்த வாசகம் இருந்தது.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை

42 சதவிகிதம் பேர் தான் தேறியிருக்கிறார்கள்

இவ்வாண்டு எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் கலந்து கொண்ட சுமார் 62,000மாணவர்களில், ஏறக்குறைய 42 சதவிகிதம் பேர்தான் தேர்ச்சிபெற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது.

சிறு மந்திரி தோழர் கோபால் ரெட்டி ஒரு பேச்சில் இத்தகவலைத் தெரிவித்தார்.

"தேன்கூடு"

மாதப் பத்திரிகை

ஜூலை முதல் நாள் வெளிவரு[illegible]

ஆசிரியர்கள்: கு. [illegible]

B. Com, க. இரா. சததி[illegible]

B. A. B. L, மீ. தங்கராஜ் B. A,

மு. இராசகோபாலன் B. A.

எங்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

நிர்வாகி:—'தேன்கூடு'

7, வெண்கலக்கடை முதல் தெரு, மதுரை.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் "மாலைமணி" விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை.

திருச்சி

குடியாத்தம்

தஞ்சை

மானேஜர்

"மாலைமணி"

சென்னை—1.

எகிப்தில் நூஸலீம் வருகை

கெய்ரோ, ஜூன். 5—

பிரிட்டிஷ் சேனாதி மார்ஷல் ஸலீம் இங்கு ஜயம் செய்திருக்கிறார். அவர் வந்து சேர்ந்ததும் பிரிட்டிஷ் ஸ்தானிகாலயத்தில் ராணுவ அதிகாரிகளுடன் ஸ்தானிக அதிகாரிகளுடனும் கலந்து பேசினார்.

எகிப்து அதிகாரிகளுடன் இவர் சந்தித்துப்பேசும்போது சர்வதேச நிலைமையை விளக்கி அதனுல் எகிப்துக்குள்ள சாதகபாதகங்களை வெளியிடுவார் எனத்தெரிகிறது. தோழர் ஸலீம் மூன்று நாட்கள் இங்கு தங்குவார் எனத் தெரிகிறது.

இவர் நடத்தும் சம்பாஷணைகள் வெற்றிகரமாக இருந்தால் பிரிட்டிஷ் எகிப்து ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்க அஸ்திவாரம் போடுவதாக ஆகும் என்று கூறப்படுகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.